**+1 வணிகவியல் ஆயத்தத் தேர்வு பிப் - 25**

**சரியான விடை**

1. (இ) பாண்டியர்
2. (இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்
3. (ஆ) வரையறாப் பொறுப்பு
4. (அ) ராபர்ட் ஓவன்
5. (அ) கிராம சேமிப்பு
6. (அ) தன்னிச்சை ஒப்பந்தம்
7. (அ) போக்குவரத்து
8. (இ) ஒழுக்கவியல்
9. (இ) வட்டி
10. (ஈ) மேற்கூறிய அனைத்தும்
11. (அ) வியாபாரம்
12. (அ) தரகர்
13. (ஆ) ஏற்றுமதி
14. (ஆ) பொதுக்குழு
15. (இ) முகவர்
16. (அ) தவிர்கக்கூடிய
17. (ஆ) முழுவதும் வரிவிலக்கிற்குட்டபட்டது
18. (அ)ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி
19. (ஈ) உடன்படிக்கை
20. (அ) A மற்றும் R சரி மேலும் R என்பது A யிற்கான விளக்கம்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பண்டமாற்று முறை** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்.

**22. இந்துச் சட்டத்தின் இரண்டு பிரிவுகள்** தயாபாகா மற்றும் மிட்டாக்சரா

**23. கடன் அட்டை** வாடிக்கையாளர்கள் மற்றும் பிற தகுதியுள்ள நபர்களுக்குக் கடன் அட்டைகளை வங்கிகள் வழங்குகின்றன. இந்த அட்டை மூலம் இந்தியாவில் எந்தக் கடையிலும் பொருள்கள் மற்றும் சேவைகளை முன்பணம் செலுத்தாமல் கடனாக வாங்க முடியும். கொடுக்கப்பட்ட காலத்திற்குள் கடன் நிலுவைத் தொகையைச் செலுத்திவிட்டால் வட்டி விதிக்கப்படுவதில்லை.

**24. தனி உரிமையின் தீமைகள் (2) :** தனிஉரிமம் கட்டணம், நிலையான உரிமைத் தொகை செலுத்துதல், தனிஉரிமம் அளித்தவரின் மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்துதல், சுதந்திரமின்மை, குறைந்த அளவு தயாரிப்பு பொருட்களையே கையாள முடியும்.

**25. சமூக அதிகாரம்:** தொழில் செய்பவரிகளிடம் கணிசமான அளவு சமுதாய அதிகாரம் உள்ளது. அவர்கள் மேற்கொள்ளும் செயல் நடவடிக்கைகள் மக்களின் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிப்பதாக உள்ளது.

நாட்டின் மேம்பாடு கருதி வேலைவாய்ப்பு, பொருளாதார முன்னேற்ற அளவு மற்றும் அனைத்து தரப்பினருக்கும் வருமானத்தை பகிர்ந்தளித்தல் போன்றவை தீர்மானிக்கும் உயர் பொறுப்பு தொழில் நிறுவனங்களுக்கு உண்டு.

**26. குறு நிறுவனங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள்:** மண்பாண்டங்கள் செய்தல், பழங்கள் மற்றும் காய்கறிகள் விற்பனை செய்தல், போக்குவரத்து, பழுதுபார்க்கும் கடைகள், குடிசைத் தொழில்கள், சிறிய கைத் தொழில்கள், கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்.

**27. இடைநிலையர்:** தொடக்கநிலை உற்பத்தியாளரிடமிருந்து, இறுதி நிலை நுகர்வோரிடம் சென்றடையும் வரையில், பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர் ஆவர்.

**28. சரக்காணை** என்பது சரக்கை ஏற்றுமதி செய்வதற்கான ஒரு ஆதாரம் ஆகும். இறக்குமதியாளர் வியாபார விசாரணைக்குப் பிறகு சரக்கை வாங்குவதற்கான சரக்கு ஆணையை தானோ அல்லது தன் முகவர் மூலமாகவோ ஏற்றுமதியாளருக்கு அனுப்பி வைக்கிறார். சரக்காணை இரண்டு நகல்களில் தயாரிக்கப்பட்டு ஒரு நகலை ஏற்றுமதியாளருக்கு அனுப்பி விட்டு, மற்றொன்றை இறக்குமதியாளர் தன்னிடம் வைத்துக் கொள்கிறார்.

**29. இந்திய ஒப்பந்தச் சட்டம் எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன .அவை யாவை?**

இந்திய ஒப்பந்தச் சட்டம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை அ.பொது ஒப்பந்தங்கள் ஆ. சிறப்பு ஒப்பந்தங்கள

**30. மத்திய சரக்கு மற்றும் சேவை வரி** சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017ன் கீழ் ஒரு மாநிலத்திற்குள்ளேயே அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.

**ஏதேனும் 7வினாக்களுக்கு விடையளி : 7X3=21**

**31. பாண்டியர் ஆட்சிக்காலத்தில் உருவாக்கப்பட்ட துறைமுகங்கள்:** கொற்கை, சாலியூர், காயல்பட்டிணம், மருகாவூர்பட்டினம், குமரி

**32. வரையறாப் பொறுப்பு:** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்தச் சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும். எனவே, அவரின் பொறுப்பு முதலீட்டு தொகையுடன் நின்று விடாமல், தன் சொந்தச் சொத்திற்கும் ஈடாகிறது.

**33. அரசு நிறுமம்** பொதுத்துறை நிறுவனங்கள், இந்திய நிறுமச் சட்டம் 1956-ன் கீழ் பதிவு செய்தால் அது அரசு நிறுமம் எனப்படும்.

இவ்வகை நிறுமங்கள் மத்திய அரசு அல்லது மாநில அரசுகளுக்கு சொந்தமானது.
இந்திய நிறுமச் சட்டம் 1956 பிரிவு 617-ன் படி அரசு நிறுமங்கள் என்பது செலுத்தப்பட்ட மூலதனம் 51% க்கு மேலாக
மத்திய அரசு
மாநில அரசு அல்லது மாநில அரசுகள்
பகுதி மத்திய அரசு மற்றும் பகுதி ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாநில அரசுகள் வைத்திருந்தால், அவற்றையே அரசு நிறுமங்கள் என்று அழைக்கப்படும். எகா:- BHEL, IOC

**34. தனி உரிமையியலின் நன்மைகள்**

**இடர்களைக் குறைத்தல்** தனி உரிமம் பெற்றவர் ஏற்கெனவே சட்டப்படி நடைபெறுகின்ற வியாபாரத்தின் வாணிப உரிமையை பெறுவதால், புதியதாக ஒரு வாணிபத்தைத் துவங்குவதில் உள்ள இடர்களில் இருந்து விடுபடுகிறார்.

**வணிக விரிவாக்கம்** பிராந்திய, தேசிய மற்றும் உலகளாவிய கூடுதல் செலவினங்கள் இல்லாமல் தங்களுடைய வர்த்தகத்தை விரிவுப்படுத்த ஒரு வாய்ப்பு கிடைக்கிறது.

**விளம்பரச் செலவு** வர்த்தகம் சார்புடைய விளம்பரங்கள் அனைத்தும் பொதுவானதாக இருப்பதால் குறைந்த செலவில் பெரும்பாலான விளம்பரச் செலவுகளை தனி உரிமையாளர் மூலம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல்** தனி உரிமம் நிதி ஆதாரத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் எந்த இடத்தில் வியாபாரத்தை அமைப்பது, அதை வடிவமைக்கும் முறை, பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல் மற்றும் அன்றாட நடவடிக்கைகளை கையாளும் முறை ஆகியவற்றை முடிவெடுத்து அவைகளை செவ்வனே செய்யும் வழிமுறையை வகுக்கிறது.

**35. பன்னாட்டு நிறுமங்கள் இந்தியாவிற்கு தேவையா?**

இந்தியாவில் பன்னாட்டு நிறுமங்களின் தேவைக்கான காரணங்கள் பல உள்ளன. அவற்றை கீழ்க்காணலாம்.
1. இந்தியாவில் மிகப் பெரிய சந்தை வாய்ப்பு இருப்பது
2. உலக அளவில் பொருளாதாரத்தில் மிகவேகமாக வளர்ந்து வரும் நாடுகளில் இந்தியா முக்கிய இடத்தைப் பெறுகிறது
3. அரசின் சாதகமான கொள்கைகள் மூலம் அன்னிய நேரடி முதலீடு பெருமளவு இந்தியாவிற்குள் வருவது
4. 1991- ஆம் ஆண்டிற்கு பிறகு இந்தியா பின்பற்றி வரும் தாராளமயமாக்கல் கொள்கை
5. அரசு கொள்கைகளை தளர்த்தி அதன் மூலம் பன்னாட்டு முதலீட்டை ஈர்க்க தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவது.

**36. தொழில் நிதியியல் - வரைவிலக்கணம் தருக. ஆர்.சி. ஆஸ்போர்ன் அவர்களின் கூற்றுப்படி**
“நிதியியல் செயல்பாடு என்பது, ஒரு வணிக நிறுவனம் நிதியினைத் திரட்டி அதை முறையாகப் பயன்படுத்துவதற்கான செயலினை குறிப்பதாகும்.

**37. மறு ஏற்றுமதி வணிகத்தின் சிறப்புக் கூறுகள்**
1. இறக்குமதி தீர்வை விதிக்கப்படுவதில்லை
2. இவ்வகை பொருட்கள் மறுசீரமைக்கப்பட்டு மற்றும் மறு கட்டுமம் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப்படுகிறது
3. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மறு ஏற்றுமதி செய்யப்படும் வரை பிணைய மீந்த பண்டக சாலையில் வைக்கப்படுகிறது

**38. உடன்படிக்கை** 2(e)ன் படி “ஒரு நபர் மற்றொரு நபருக்கு செய்ய வேண்டிய மறுபயன் உருவாக்கும் ஒவ்வொரு உறுதிமொழியும், உறுதிமொழியின் தொகுதியும்” உடன்படிக்கை ஆகும்.

**39. நபர் என்ற சொல்லில் பின்வருபவர்கள் அடங்குவர்.** தனிநபர், இந்து கூட்டுக் குடும்பம், கூட்டுப்பங்கு நிறுமம், கூட்டாண்மை நிறுவனம், பல நபர்களின் சங்கமம் அல்லது தனிநபர்களின் குழுமம் (கூட்டுறவு), உள்ளாட்சி நிர்வாகம், சட்ட ரீதியான செயற்கை நபர்கள்.

**40. இருதலை ஒப்பந்தம்:-** ஒப்பந்தம் ஒன்று உருவாகும் பொழுது, இரு தரப்பினரும் தங்கள் கடமைகளை ஆற்ற வேண்டி இருப்பின் அத்தகைய ஒப்பந்தம் இருதலை ஒப்பந்தம் எனப்படுகிறது.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

**41.அ.**

| அடிப்படை | உற்பத்தித் தொழில் | வணிகம் | வியாபாரம் |
|---|---|---|---|
| பொருள் | பிரித்து எடுத்தல், மறு உற்பத்தி, மாற்றுதல் பயனுள்ள பொருட்களை தயாரித்தல் போன்ற செயல்களைக் குறிக்கின்ற | பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலைக் குறிக்கின்றது. | பொருட்கள் மற்றும் சேவைகள், கொள்முதல் மற்றும் விற்பனையைக் குறிக்கின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | து. | | |
| உள்ளடக்கம் | கச்சா பொருட்கள், பகுதியாக முடிவு பெற்ற பொருட்களை முழு இறுதிப் பொருளாக மாற்றும் அனைத்து நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. | வியாபாரம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை உள்ளடக்கியது. | பொருட்கள் மற்றும் சேவை பரிமாற்றம் உள்ளடக்கியது. |
| முதல் | அதிக முதலீடு தேவை | குறைந்தளவு முதலீடே தேவை | போதுமான சரக்கிருப்பை வைத்திருக்கவும், கடன் அளிக்கவும் தேவையான முதல் தேவை. |
| இடர்பாடு | அதிக இடர்பாடு கொண்டது | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. | குறைவான இடர்பாட்டைக் கொண்டது. |
| பரிமாணம் | பொருட்கள் மற்றும் சேவையின் வழங்கல் அளிப்பு பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | பொருட்கள் மற்றும் சேவையில், தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. | இது அளிப்பு மற்றும் தேவை பக்கத்தைப் பிரதிபலிக்கிறது. |

**41.ஆ. குறுகிய கால நிதி ஆதாரங்கள்:**

**கடன்களும் முன் பணங்களும்:-** கடன் என்பது, கடன் கோருபவரின் கடன் கணக்கில் ஒட்டு மொத்தக் கடன் தொகையையும் ஓரே வீச்சில் வரவு வைக்கப்பட்ட தொகையைக் குறிக்கும். கடன் மற்றும் முன் பணங்கள் வழக்கமாக, நிலை வைப்பு ரசீது, சரக்குரிமை ஆவணங்கள், பங்குகள் மற்றும் கடன் பத்திரங்கள் போன்ற ஒரு சில பிணையங்களை ஈடாக பெற்றுக் கொண்டு வழங்கப்படுகிறது.

**வங்கி மேல்வரைப் பற்று:-** வங்கி மேல்வரைப்பற்று என்பது வங்கியில் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு உட்பட்டு, ஒரு வாடிக்கையாளரின் வங்கி நடப்பு கணக்கில், வரவில் இருக்கும் தொகையை விட அதிகமான தொகையை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளும் ஒரு ஏற்பாடு ஆகும். எவ்வளவு தொகை கடனாகப் பெறப்படுகிறதோ அதற்கு மட்டுமே வட்டி வசூலிக்கப்படுகிறது.

**மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல்:-** சரக்குகளை கடன் அடிப்படையில் விற்கும் போது, விற்பவர் வாங்குபவரின் பேரில் மாற்றுச்சீட்டை எழுதுகிறார். மாற்றுச்சீட்டு சராசரியாக 15 நாள் முதல் அதிகபட்சம் 180 நாட்கள் வரையிலான காலத்திற்கு வரையப்படுகிறது. மாற்றுச்சீட்டை தள்ளுபடி செய்தல் என்பது, அதன் முதிர்வு காலத்திற்கு முன்பாக வங்கிகளிடம் தள்ளுபடியில் விற்றுப் பணம் பெறும் ஒரு நடவடிக்கையைக் குறிக்கிறது.

**வியாபாரக் கடன்:-**வியாபாரக் கடன் என்பது ஒரு வணிகர் பிறிதொருவருக்கு சரக்கு மற்றும் சேவையைப் பெறுவதற்காகத் தருகின்ற கடனைக் குறிக்கும். இவ்வகை வணிகக் கடன்கள் ஒரு சில நேர்மையான மற்றும் நற்பெயர் ஈட்டிய வாடிக்கையாளருக்கு மட்டுமே கொடுக்கப்படும் சலுகையாகும்.

**அடகுக்கடன்:-** கடன் பெறுநர், அவசர நிதித் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள, தனக்கு சொந்தமான பொருளைக் கடன் வழங்குநரிடம் அடகு வைத்துக் கடன் பெறுகிறார். கடனைத் திருப்பிச் செலுத்தும் வரை அடகு வைக்கப்பட்ட பொருள் கடனாளரிடமே இருக்கும். கடனாளி, கடனைத் திருப்பி அடைக்கத் தவறினால், கடனாளர் தகுந்த முன்னறிவிப்பை கடனாளிக்கு கொடுத்துவிட்டு அடகு வைத்த பொருளை ஏலம் விடுவார். ஏலம் விடுவதன் மூலம் பெறப்பட்ட தொகையைக் கடனுக்கும் மற்றும் அதற்குண்டான வட்டிக்கும் எடுத்துக் கொண்டு மீதி தொகை ஏதும் இருப்பின், அதைக் கடனாளிக்கு வழங்குவார்.

**அடமானம் கடன்:-** அசையா சொத்தினை ஈடாக வைத்து நிதி திரட்டும் முறைக்கு அடமானம் என்று பெயர்.

**பந்தக கடன்:-** பந்தக கடன் என்பது, அசையும் சொத்துக்களின் மூல ஆவணங்களை கடனாளரிடம் அடகு வைத்து பெறப்படும் கடனாகும்.

**42.அ. இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள்**

**1. விரைவான தொழில்மயமாக்கம்** வளரும்நாடுகள் விரைவாக தொழில்மயமாக வேண்டுமெனில் தங்களுக்கு தேவையான தொழில்நுட்பம், பற்றாக்குறையான மூலபொருட்கள். மூலதன பொருட்கள், (இயந்திரம், கருவிகள்) போன்றவற்றை

பிற நாடுகளில் இருந்து இறக்குமதியின் மூலமாக கொள்முதல் செய்ய வேண்டும்.

**2. நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றல்** உள் நாட்டில் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான அளவில் பொருட்கள் கிடைப்பதில்லை அல்லது உற்பத்தி செய்ய முடிவதில்லை, எனவே அவ்வகை பொருட்களை பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து பற்றாக்குறையை பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

**3. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்** உள்நாட்டு நுகர்வோர்கள் தங்களுக்குத் தேவையான கைபேசி, மகிழ்வுந்து, மடிக்கணினி, தொலைக்காட்சிப்பெட்டி, ஒலி சாதனம், துணி துவைக்கும் இயந்திரம் மற்றும் நறுமணப்பொருட்கள் போன்றவற்றை இறக்குமதி வணிகத்தின் மூலம் வாங்கிப் பயன்படுத்தி தங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்கின்றனர்.

**4. பொருள் பற்றாக்குறையை சமாளித்தல்** புயல், நில நடுக்கம், வறட்சி, ஆழிப்பேரலை, கடுமையான விலையேற்றம், போன்ற சூழ்நிலைகள் காரணமாக உணவுப்பொருட்கள், காய்கறிகள், மற்றும் பிற முக்கிய பொருட்களை அயல் நாட்டிலிருந்து இறக்குமதி செய்து பொருட்களின் பற்றாக்குறையை சமாளிக்கலாம்.

**5. நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துதல்** பல நாடுகள் தங்களின் பாதுகாப்பை அதிகரிக்க இராணுவம் சார்ந்த கருவிகளை பிற நாடுகளிலிருந்து வாங்கி, தங்களுடைய நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்கின்றன.

**42.ஆ. சட்டப்படி செல்லக் கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை?**

**முனைவும் ஏற்பும்:-** ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை. அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.

**சட்ட உறவு முறை:-** ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள்நோக்கம், தங்களுக்கிடையே ஓர் சட்ட உறவு முறை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும்.

**சட்ட பூர்வமான மறுபயன்:-** மறுபயன் என்பது, எதையேனும் திரும்பப் பெறுதல் ஆகும். மறுபயன் இல்லாத உடன்படிக்கை செல்லாத உடன்படிக்கையாகும்.

**சட்டபூர்வமான நோக்கம்:-** உடன்படிக்கை நோக்கம் சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். இதன் நோக்கம், சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிராகவோ இருக்கக் கூடாது.

**தன்னிச்சையான இசைவு:-** உடன்படிக்கை நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருந்தல் வேண்டும். ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களிடம் மனமொத்த இசைவு தர வேண்டும். அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில் ஒரே நோக்குடன் உடன்பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.

**ஒப்பந்த தகுதி** ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.

**சட்டத்தால் செயல்படுத்தும் திறன்:-** சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும். சட்டத்தால் சில உடன்படிக்கை சட்ட விரோதமானது அல்லது செல்லாது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**43.அ. பன்னாட்டு வணிகத்தின் வகைகள்**

**1. ஏற்றுமதி வியாபாரம்** ஒரு நாட்டினுடைய வியாபார நிறுவனம் சரக்கு மற்றும் சேவைகளை மற்ற நாட்டில் உள்ள வியாபார நிறுவனத்திற்கு விற்பனை செய்தால் அதுவே ஏற்றுமதி வியாபாரம் எனப்படும். ஏற்றுமதி வியாபாரம் என்பது உள் நாட்டிலிருந்து சரக்கு மற்றும் சேவைகளை அயல் நாட்டிற்கு விற்பனை செய்வது ஆகும்.

எடுத்துகாட்டாக, இந்திய வியாபார நிறுவனம் கைவினைப்பொருட்கள், தோல் பொருட்கள், மின்னணு பொருட்கள், மூலிகை பொருட்கள் ஆகியவற்றை மற்ற நாடுகளுக்கு விற்பனை செய்கிறது.

**2. இறக்குமதி வியாபாரம்** ஒரு நாட்டினுடைய வியாபார நிறுவனம் சரக்கு மற்றும் சேவைகளை மற்ற நாட்டில் உள்ள வியாபார நிறுவனத்திலிருந்து கொள்முதல் செய்தால் அதுவே இறக்குமதி வியாபாரம் எனப்படும். இறக்குமதி வியாபாரம் என்பது அயல் நாட்டிலிருந்து பொருட்களை வாங்கி உள் நாட்டிற்கு கொண்டு வருவது ஆகும்.

எடுத்துகாட்டாக, இந்திய வியாபார நிறுவனம் பெட்ரோலிய பொருட்கள், மின்னணு பொருட்கள், இயந்திரம், மற்றும் மருத்துவ உபகரணங்களை மற்றநாடுகளிலிருந்து கொள்முதல் செய்வது ஆகும்.

**3. மறு ஏற்றுமதி வியாபாரம்** ஒரு நிறுவனம் ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன் பொருட்களை மற்ற நாட்டிலிருந்து இறக்குமதி செய்தால் மறு ஏற்றுமதி வணிகம் எனப்படும்.

எடுத்துகாட்டாக, இந்திய வியாபார நிறுவனம் ஈரான் நாட்டிலிருந்து கச்சா எண்ணெயை இறக்குமதி செய்து அதை சுத்திகரித்து நேபாள

நாட்டிற்கு ஏற்றுமதி செய்வது மறுஏற்றுமதி வணிகம்
எனப்படும்.

**43.ஆ. இந்திய ரிசர்வ்வங்கியின் பல்வேறு பணிகள்:**

**உலக நிதி நிறுவனங்களில் இந்தியாவின் பிரதிநிதி:-**சர்வதேச வங்கியியல் தரநிலைகளுக்கிணங்க நல்லிணக்கம் மற்றும் நிலைத்தன்மையைப் பராமரிப்பதற்காக இந்திய ரிசர்வ் வங்கியானது, வங்கியியல் மேற்பார்வை பேசல் குழுவுடன் 1997 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல்பட்டு வருகிறது. பன்னாட்டு மறுசீரமைப்பு மற்றும் மேம்பாட்டு வங்கி மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தில் டிசம்பர் 27, 1945 முதல் இந்திய அரசின் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி இருந்து வருகிறது.

**இந்திய வங்கிகளின் கட்டமைப்பின் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல்:-**

நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளையும் ஒழுங்குபடுத்த விரிவான வழிகாட்டுதல்களை, இந்திய ரிசர்வ் வங்கி வகுத்து வழங்கு வருகிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் 1934 மற்றும் வணிக வங்கிகளின் ஒழுங்கு முறைச் சட்டம் 1949 ஆகியவற்றின் கீழ் வணிக வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல், கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடுதல் போன்ற அதிகாரங்களை ரிசர்வ் வங்கி கொண்டுள்ளது. எந்த வணிக வங்கிகளையும் ஆய்வு செய்யவும், வங்கிகளிடமிருந்து தேவையான தகவல்களைக் கேட்டுப் பெறவும் அதிகாரம் கொண்டிருக்கிறது.

**பணவியல் உச்ச நிலை அதிகாரி:-** விலைவாசி நிலைத் தன்மையையும், பணவீக்கப் போக்குகளையும் ஒழுங்குப்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் நாட்டின் பணவியல் கொள்கையை இந்திய ரிசர்வ் வங்கி தீர்மானிக்கிறது. இது விவசாயத்திற்கான நிதிகளை வழங்குதல், திட்டங்களை அமல்படுத்துவதற்கான ஆதாரங்களைத் திரட்டுதல், வங்கிக் கடன் மற்றும் சர்வதேச நிதி சம்பந்தமான சட்டங்களை இயற்றுதல் பற்றிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறது.

**பொருளாதார அளவுருக்களை கூர்ந்து கண்காணித்தல்:-** பொருளாதாரத்தின் பரந்த அளவுருக்கான வேலைவாய்ப்பு நிலை, விலைவாசி அளவுகள் மற்றும் உற்பத்தி அளவு, வர்த்தக சுழற்சிகள், அயல்நாடுகளின் முதலீட்டு உள்ளீடுகள் மற்றும் செலுத்தல் சமநிலை போன்றவைகளை இந்திய ரிசர்வ் வங்கி கூர்ந்து கண்காணித்துப் பொருளாதார உறுதித்தன்மை மற்றும் வளர்ச்சியை அடைவதற்கு உதவுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் நிதி மேற்பார்வை வல்லுநர்குழு, குறைந்த பட்சம் மாதத்திற்கு ஒரு முறையாவது (சில சமயம் ஒவ்வொரு நாளிலும்) கூடி, நாடு முழுவதும் நடப்பு நிகழ்வுகள் அனைத்தையும் கவனமாகக் கண்காணித்து முடிவெடுக்கிறது.

**புதிய சவால்களுக்கு உடனடியாகப் பதிலளிப்பது:-**
இந்திய வங்கி அமைப்புக்கு எதிராக எப்பொழுதெல்லாம் புதிய சவால்கள் எழுந்தாலும், இந்திய ரிசர்வ் வங்கி உடனடியாக ஒரு குழுவினை ஏற்படுத்தி, ஆய்வு செய்தல் மற்றும் தலைமை சுற்றறிக்கைகளை வெளியிடுதல் போன்ற பணிகளை மேற்கொண்டு, இந்திய வங்கிகளை வலுப்படுத்துகிறது. ரிசர்வ் வங்கியின் சுற்றறிக்கைகள் மற்றும் வல்லுநர் குழு அறிக்கைகளில், வளம் சேர்க்கும் பல தகவல்களைக் காணலாம்.

**44.அ. சரக்கு மற்றும் சேவை வரி வகைகள்:**

**மத்திய சரக்கு மற்றும் சேவை வரி:-** சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017ன் கீழ் ஒரு மாநிலத்திற்குள்ளேயே அளிக்கப்படும் சரக்குகள் மீது மத்திய அரசால் சுமத்தப்பட்டு வசூலிக்கப்படும் வரி ஆகும்.

**மாநில சரக்கு மற்றும் சேவை வரி:-** தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரி சட்டம் 2017ன் கீழ் மாநில அரசால் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும். இது மாநில அரசால் சுமத்தப்படுகிறது. விற்பனை வரி, ஆடம்பர வரி, மற்றும் நுழைவு வரிகளுக்கு மாற்றாக உள்ளது.

**யூனியன் பிரதேசத்திற்கான சரக்கு மற்றும் சேவை வரி:-** UGST சட்டம் 2017-ன் கீழ் இந்தியாவில் உள்ள யூனியன் பிரதேசங்களில் சுமத்தப்பட்டு, வசூலிக்கப்படும் வரி ஆகும்.

**ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி:-** IGST சட்டம் 2017-ன் கீழ், மத்திய அரசால் சுமத்தப்பட்டு மற்றும் வசூலிக்கப்பட்டு, மாநில அரசுகளுக்கிடையே வருவாய் பகிர்ந்து கொள்ளப்படுகின்றது.

**44.ஆ. வணிகத்தின் பல்வேறு தடைகளை கூறுக.**

**ஆள்சார் தடை:-** பொருள்கள் தேவைப்படும் நபர்களையும், நியாயமான விலையில் வாங்க விரும்புபவர்களையும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. உற்பத்தியாளரும் நுகர்வோரும் ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்பே கிடையாது. இக்குறைபாடே ஆள்சார் தடை எனப்படும். வணிகத்தின் முக்கிய அங்கமாகத் திகழும் வியாபாரம் இக்குறைபாட்டை நீக்க உதவுகிறது.

**இடத்தடை:-** பொருட்கள் ஒரு இடத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதும் மற்றும் உலகம் முழுவதும் உள்ள நுகர்வோர்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. உற்பத்தியாளரையும், நுகர்வோரையும் பிரிக்கும் தூரமே இடத்தடை எனப்படுகின்றது. இத்தடை போக்குவரத்தின் மூலம் நீக்கப்படுகின்றன.

**காலத்தடை:-** ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் ஆண்டு முழுவதும் தேவை ஏற்படும். தேவையைக் கணக்கில் கொண்டு பேரளவு உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்கத் தயார் நிலையில் பொருட்களை வைத்திருக்க வேண்டும். பண்டகக் காப்பகம் காலத்தடையை நீக்குகிறது.

**இடர் மற்றும் பொருட்கள் தரம் கெடாமல் இருக்கத்தடை:-**பொருட்கள் முறையாக சிப்பம் கட்டுதல் மற்றும் நவீன குளிர்சாதன வசதி கொண்ட பண்டகசாலைகள் ஆகியவற்றால் பொருட்களின் தரம் குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. பொருட்கள் பூச்சிகள், எலிகள் ஆவியாதல் போன்றவைகளுக்கு எதிராக பாதுகாக்கப்படுகின்றன.

**நட்ட இடர்பாட்டுத்தடை:-** ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இருப்பு வைக்க பொருட்களைக் கொண்டு செல்லும் போது ஆட்களாலும், இயற்கையாலும் நட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. இவ்விடர் தீக்காப்பீடு, கடல்சார் காப்பீடு மற்றும் பொதுக்காப்பீடு மூலம் நட்டம் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**அறிவுசார் தடை:-** சந்தை நிலவரங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள முடியாததால் நுகர்வோர் தரமான பொருட்களை நியாயமான விலையில் வாங்க இயலாமல் போய்விடக்கூடும். இது அறிவுசார் தடை எனப்படும். நல்ல விளம்பரம் மற்றும் விற்பனையாளர் சேவைகள் மூலம் இத்தடை நீக்கப்படுகின்றன.

**பண்டப்பரிமாற்றத் தடை:-** பணம் பண்டப்பரிமாற்றத்தில் முக்கிய பங்கு வகுக்கிறது. பொருட்களுக்கு உண்டான சரியான விலையை செலுத்துவதன் மூலம் எந்தவொரு தயாரிப்பு அல்லது சேவைகளையும் வாங்குதல் மற்றும் விற்பது ஆகியவற்றை செயல்படுத்துகிறது.

**நிதித்தடை:-** உற்பத்தியாளர்களுக்கு, வர்த்தகர்களுக்கு அவசியமான நேரத்தில் தேவையான நிதி கிடைப்பதில்லை. நிதி ஆதாரம் குறைந்து, வியாபாரம் தடைப்படுதலே நிதித்தடை எனப்படுகின்றது. இத்தடை, வங்கி மற்றும் நிதி நிறுவனங்களால் நீக்கப்படுகின்றன.

**45.அ. பொதுக் கழகத்தின் இயல்புகள் (ஏதேனும் ஐந்து மட்டும்)**

**தனித்தியங்கும் சட்டத் தன்மை:-** மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகிறது. அச்சட்டத்தின் மூலம் அதற்கான அதிகாரங்கள் நோக்கங்கள் பணிகள் மற்றும் பாராளுமன்றம் அல்லது சட்டச்சபையின் மூலம் உருவாக்கப்பட்ட அமைச்சகத்துடன் தொடர்புள்ளது.

**நீடித்த நிலைத்தன்மை:-** பொது முத்திரையுடன் நீடித்த நிலைத்த தன்மையுடன் சட்டபூர்வமாக செயல்படும். அரசுடன் தொடர்புடையது மட்டும் அல்லாமல், தனித்து இயங்கக் கூடியது. இதன் சொத்துக்கள் அனைத்தும் தனக்குச் சொந்தமானதும், தன் பெயரிலேயே உடன்படிக்கை செய்யவும் வழக்குப் பதியவும் இயலும்.

**அரசின் முதலீடு:-** தனக்குத் தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது. எனினும், முதலீட்டுச் சந்தையிலிருந்தும் மூலதனத்தைத் திரட்டுகின்றன.

**நிதி தன்னாட்சியுரிமை:-** பொதுக்கழகங்கள் நிதி தன்னாட்சி பெற்றவை. தனக்கான வரவு செலவுத் திட்டத்தை தானே தயாரித்துக் கொள்ளவும், அதற்கான அதிகாரம் பெற்றுக் கொள்ளவும் மற்றும் வியாபாரத்தில் அந்த நிதியை பயன்படுத்தவும் அதிகாரம் பெற்றவையாகும்.

**இயக்குனரவையால் நிர்வாகம்:-** அரசால் பரிந்துரைக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்ட இயக்குனரவைக்கு மேலாண்மை செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால், கழகத்தின் அன்றாட நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இல்லை.

**பணியாளர்கள் நியமனம்:-** தனக்குத் தேவையான பணியாளர்களை தானே நியமனம் செய்து கொள்ளவும், ஊதியம், பணித்தன்மை ஆகியவற்றை கழகங்களே முடிவு செய்து கொள்ளலாம்.

**45.ஆ. ஏட்டுக்கடன் முகமையின் படிநிலைகள்**

1. உரிமைப் பேராள் தமது வாடிக்கையாளர் கடனை திருப்பிச் செலுத்தும் தகுதியை மதிப்பீடு செய்கின்றார். பின் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் அவர்களின் பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகளில் எந்தத் தொகை அளவிற்கு மற்றும் கால அளவிற்கு தாம் கொள்முதல் செய்ய தயாராக உள்ளாரோ அதை வரையறை செய்கின்றார்.

2. எப்பொழுதும் போல வாடிக்கையாளர் பொருட்களை விற்று அதற்குரிய சரக்குப் பட்டியலில், இச்சரக்குப் பட்டியலின் மீதான

நிலுவையாக உள்ள தொகையின் உடைமை உரிமைச் சட்டப்படி மாற்றி வழங்கப்படுகிறது.

3. வாடிக்கையாளர், சட்டப்படி உடமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் நகல்களை உரிமைப் பேராள்களுக்கு அனுப்புகிறார்.

4. உடனடியாக உரிமைப் பேராள் அவ்வாறு அனுப்பப்பட்ட சட்டப்படி உடைமை உரிமை மாற்றப்பட்ட சரக்குப் பட்டியலின் மதிப்பில் 80 விழுக்காடு வரையிலான குறுகிய கால கடனை தமது வாடிக்கையாளருக்கு அளிக்கின்றார்.

5. பொருட்களை வாங்கியவர் சரக்குப் பட்டியலுக்குரிய தொகையை அளித்த உடன் சரக்குப் பட்டியல் மதிப்பில் மீதமுள்ள 20 விழுக்காடு தொகையை உரிமைப் பேராளானவர் வாடிக்கையாளருக்கு அளிப்பார்.

6. உரிமைப் பேராளால் கொள்முதல் செய்யப்பட்ட கடன்களிலிருந்து 20 விழுக்காடு தக்கவைத்தல் தொகையை கழித்த பின் வரும் தொகையின் மீது வாடிக்கையாளருக்கு உள்ள பணம் எடுத்தல் தகுதியின் (Drawing Eligibility) அடிப்படையில் வாடிக்கையாளர் தமது கணக்கிலிருந்து பணத்தை எடுக்க அனுமதிக்கப்படுகின்றார்.

**46.அ. கூட்டாண்மை கலைப்பின் வகைகள்:** கூட்டாண்மை கலைப்பு இரண்டு விதமாக நடைபெறுகிறது.

1. நிறுவன கலைப்பு 2. கூட்டாண்மை கலைப்பு ஆகும்.

அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு

ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு

**அ. நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு**

1. கூட்டாளியின் உடன்பாட்டால் அனைத்து கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளிடையே ஏற்படும் உடன்பாட்டால், கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படலாம்.

**2. ஒருவர் தவிர அனைத்துக் கூட்டாளிகளும் நொடிப்பு நிலை:-** ஏதாவது ஒருவர் நொடிப்பு நிலை அடைந்தாலோ அல்லது அனைத்து கூட்டாளிகளும் நொடிப்பு நிலை அடைந்தாலோ நிறுவம் கலைப்பு எனப்படும்.

**3. சட்டத்திற்கு புறம்பான செயலால்:-** சட்டத்திற்கு புறம்பாக தொழிலில் ஈடுபட்டிருந்தால் தானாகவே நிறுவனம் கலைக்கப்படலாம்.

**4. விருப்பமுறிக் கூட்டாண்மை அறிக்கையால் கலைப்பு:-** ஏதாவது ஒரு கூட்டாளி, கடிதம் மூலம் அனைத்து கூட்டாளிகளுக்கும், தனது விருப்பமான கலைப்பை தெரிவித்தால் நிறுவனக் கலைப்பு ஏற்படும்.

**5. சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு:-**

ஒரு கூட்டாளி இறந்து விட்டால்

குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின் அக்காலம் முடிவடைந்துவுடன்

குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே கூட்டாண்மை தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்றவுடன்.

ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்துவிட்டால், கூட்டாண்மை கலைக்கப்படும்.

**ஆ. நீதிமன்றத்தால் கலைப்பு:-** நீதிமன்றத்தில் கூட்டாளி ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

1. கூட்டாளி பைத்திய நிலையானால்
2. நிலையான திறமையின்மை
3. கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக் கேடு
4. உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை
5. உரிமை மாற்றம்
6. தொடர் நட்டம்
7. நீதி நேர்மை அடிப்படையில்

நிறுவனத்தை கலைத்திட, போதிய அடிப்படையில் காரணம் உள்ளது என்று நீதிமன்றம் கருதினால், கூட்டாண்மைக் கலைக்கப்படலாம்.

கூட்டாண்மை கலைப்பு:-

கூட்டாளிகளின் உடன்பாடு முடிவுக்கு வருவதாகும். கூட்டாளியின் நொடிப்பு நிலை, விலகல், கூட்டாண்மைக் காலம் முடிவு முதலியவற்றால் கூட்டாண்மை கலைப்பு ஏற்படும். ஆனால், தொழில் கூட்டாண்மை கலைப்பிற்குப் பிறகும் தொடர்ந்து நடைபெறலாம். எகா:- A,B,C மூவரும் கூட்டாளிகள் இதில் A என்பவர் விலகிக் கொண்டாலும் Bயும் Cயும் சேர்ந்து கூட்டாண்மையைத் தொடர்ந்து நடத்த ஒப்புக் கொண்டால், தொழிலை நடத்தலாம்.

**46.ஆ. சில்லறை வியாபாரிகளின் பண்புநலன்கள்**

சில்லறை வியாபாரிகள் பல்வேறு பொருட்களின் வணிகத்தில் ஈடுபட்டிருப்பார்.

சில்லறை வியாபாரிகள் மொத்த வியாபாரிகளிடம் மொத்தமாகப் பொருட்களை வாங்கி, அவற்றைச் சிறு அளவில், நுகர்வோருக்கு விற்பனை செய்கின்றனர்.

முக்கியச் சந்தைப் பகுதிக்கு உள்ளேயோ அல்லது அருகிலேயோ சில்லறை விற்பனை நிலையங்கள் இடம் பெறும்.

பொதுவாக மொத்த வியாபாரிகளிடம் கடன் அடிப்படையில் சரக்குகளை வாங்கி, நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு விற்கின்றனர்.

சில்லறை வியாபாரிகள் நுகர்வோரிடம் நேரடித் தொடர்பிலும், உற்பத்தியாளரிடம் இருந்து விலகியும் இருப்பார்.

**47.அ. உங்கள் வாடிக்கையாளர் (KYC) விதிமுறைகளைப் பற்றி அறியவும்**

KYC (Know Your Customer) என்பது “உங்கள் வாடிக்கையாளரை அறிக” என்று பொருள்படும்.
வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் முகவரி போன்ற தகவல்களை வங்கிகள் பெற்று வைத்திருக்க வேண்டும் என்பது ஒரு பொதுவான விதிமுறையாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த விதி வங்கி சேவைகளை
யாரும் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என உறுதியளிக்க உதவுகிறது. வங்கி கணக்குகள் தொடங்கும் போது
இந்த KYC நடைமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றன. இந்த விவரங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட வேண்டும்.
ஒரு வங்கிக் கணக்கைத் தொடங்க விரும்பும் ஒரு நபர், சமீபத்திய புகைப்படம் ஒன்றுடன் ‘ஆள் அடையாளத்திற்கான சான்று ஒன்றும் முகவரிக்கான சான்று ஒன்றும்’ சமர்ப்பிக்க வேண்டும்.
ஆறு ஆவணங்கள் இந்திய அரசாங்கத்தால் (Officially Valid Documents-OVDs) ‘அதிகாரப்பூர்வமாகச் செல்லுபடியாகும் ஆவணங்கள்’ என அறிவிக்கப்பட்டுள்ளன. அவைகள் 1.கடவுச் சீட்டு, 2.ஓட்டுனர் உரிமம், 3.வாக்காளர் அடையாள அட்டை, 4.நிரந்தர கணக்கு எண் (வருமான வரி) அட்டை, 5.UIDAI ஆல் வழங்கப்பட்ட ஆதார் அட்டை மற்றும் 6.தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்ட (NREGA) அட்டை. ஆகியவற்றில் ஏதேனும் ஒரு அட்டையைக் கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். ஆள் அடையாளத்திற்குச் சமர்ப்பிக்கும் அட்டையில் முகவரிச் சான்றுக்கான ஆதாரம் இருந்தால் அதையே முகவரிச் சான்றுக்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாம்.
அவ்வாறு இல்லையெனில் அதிகாரப்பூர்வமாகச் செல்லுபடியாகும் ஆவணங்களில் வேறு ஒரு ஆவணத்தை முகவரிச் சான்றுக்கு ஆதாரமான விவரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

**47.ஆ.**

| **வேறுபாட்டின் அடிப்படையில்** | **செலுத்தல் சமநிலை** | **வாணிப சமநிலை** |
|---|---|---|
| **பொருள்** | குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டில் குடியிருப்போர்களுக்கும், மற்ற நாடுகளில் குடியிருப்போர்களுக்கும் இடையில் ஏற்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் முறைப்படியான பதிவுகளில் ஒரு அறிக்கையே ஆகும். | ஒரு நாட்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மதிப்புகளுக்கு இடையிலான நிகர விளைவை குறிக்கும். |
| **நடவடிக்கைகளின் தன்மை** | இது சரக்குகள் மற்றும் சேவைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகள் இரண்டையும் பதிவு செய்கிறது. | இதில் சரக்குகள் தொடர்பான நடவடிக்கைகள் மட்டும் பதிவு செய்யப்படும். |
| **மூலதன நடவடிக்கைகளில் பதிவு** | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்கிறது. | இது மூலதன நடவடிக்கைகளை பதிவு செய்வதில்லை. |
| **நடவடிக்கை உள்ளமைப்பு** | இதில் வாணிபச் சமநிலை, சேவைகள் சமநிலை, ஒரு பக்கமான செலுத்தல் பரிமாற்றம் மற்றும் மூலதன நடவடிக்கைகள் அடங்கும். | செலுத்தல் சமநிலையின் நடப்புக் கணக்கில் ஒரு பகுதி ஆகும். |
| **நிகர விளைவு** | எப்பொழுதும் பெறுதல் மற்றும் செலுத்துதல் சமநிலையில் இருக்கும். | இது சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அல்லது சமநிலையிலோ இருக்கும். |
| **பொருளாதார நிலையை காட்டுதல்** | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்ள உதவுகிறது. | நாட்டின் பொருளாதார வளர்ச்சியை எடுத்துக் காட்டுவதில்லை. |